19th July 1962] *[திரு. எம். பக்தவத்சலம்]*

இன்று இந்த மன்றத்துக்கு வராமல் எதிர்த் தரப்பில் உள்ள ஸ்தானங்கள் காலியாக இருப்பதால், ஏதாவது குறைபாட்டையோ அல்லது கண்டனத்தையோ அவர்கள் தங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்களா? கேள்வி நேரத்திலும் அவர்கள் வரவில்லை. இப்பொழுது பட்ஜெட் விவாதம் தொடங்க இருக்கிறது. இந்தச் சமயத்தில், தங்களிடம் ஒன்றும் சொல்லாமல், மெயின் ஆப்பொஸிஷனை இருக்கிற 50 பேர்கள், மன்றத்திற்கு வராமல் இருக்கிறார்கள். வேறு வேலை இருந்தால் அதை வேறு காலத்தில் வைத்துக் கொள்ளலாம். அவசரமாயிருந்தால், தங்களுக்கும் இந்த மன்றத்திற்கும் தெரிவித்திருக்கலாம். இப்படித் திடீரென்று எதிர்க் கட்சியினர் இந்த மன்றத்திற்கு இன்று வாராத காரணத்தினால், அவர்கள் பொறுப்பை உணர்ந்து நடந்துகொள்வதாகத் தெரியவில்லை. தங்களுக்கு ஏதாவது தெரிவித்திருக்கிறார்களா என்பதை இந்த மன்றம் தெரிந்துகொள்வதற்காக, நான் இந்த விஷயத்தைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கனம் சபாநாயகர்: சட்டசபைத் தலைவருக்கு அப்படி எந்த விதமான அறிவிப்பும் கிடையாது. அவர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கலாம். ஆனால் அப்படிக் கொடுக்கவில்லை. சட்டப்படி ஒன்றும் நான் செய்வதற்கில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: இந்த மாதிரி ஒரு விதமான தகவலும் கொடுக்காமல் எதிர்க் கட்சிக்காரர்கள் நடந்துக்கொண்டிருப்பது இந்தச் சபையையும், சபைத் தலைவரையும் அவமானப் படுத்துவதாக எடுத்துக் கொள்ளப்படமாட்டாதா?

கனம் சபாநாயகர்: அப்படி எடுத்துக்கொண்டால் எல்லோரும் அவமானப் படுத்திக்கொண்டே இருப்பார்கள். ஆகவே இதை அப்படி எடுத்துக் கொள்ளக்கூடாது. இது எதிர்க்கட்சியினருடைய சொந்த விஷயம். நமக்கு ஒன்றும் அதில் சம்பந்தம் இல்லை.

III.—CALLING ATTENTION TO THE DISTRIBUTION OF KNIVES TO SUPPOTRERS OF " WE TAMILS " MOVEMENT.

MR. SPEAKER: SRI M. S. Selvarajan will call the attention of the Hon. the Finance Minister to a matter of urgent public importance, viz., distribution of knives to supporters of ' We Tamils Movement ', at public meetings by the Leader of the ' We Tamil ' movement and the need for affording protection to Congress workers and supporters by the Government.

SRI M. S. SELVARAJAN: I would like to call the attention of the Hon. Minister in charge of Finance to a matter of urgent public importance, viz., the distribution of knives to supporters of " We Tamils Movement."

1962-ம் வருடம் மார்ச் மாதம் "நாம் தமிழர்" கட்சித் தலைவர் திரு. எஸ். பி. ஆதித்தனார் திருச்செந்தூரிலும், வேறு சில இடங்களிலும் நடந்த பொதுக்கூட்டங்களில் தங்கள் ஆதரவாளர்களுக்

[Sri M. S. Selvarajan] [19th July 1962

குப் பகிரங்கமாகக் கத்திகள் வழங்கியதான செய்தியை, அவர்கள் சார்பாக நடத்தும் பத்திரிகைகளான 'தினத் தந்தி' 'மாலை முரசுப்' பத்திரிகைகளில் படங்களுடன் பிரசுரித்திருப்பதும், அதன் விளைவாகத் திருச்செந்தூர் தாலூகாவில் காங்கிரஸ் ஊழியர்களுக்கும் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் ஒரு பந்தோபஸ்து அற்ற பயங்கர விளைவுகளும், நிலைமைகளும் ஏற்பட்டிருக்கின்றன என்பதை இதன் மூலமாகக் கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் நோட்டீசைத்தான் படிக்க வேண்டும். பிரசங்கம் செய்யக்கூடாது.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : With reference to the matter raised by the hon. Member, I would like to make the following statement :—

On the 9th of March last, a public meeting was held at Tiruchendur under the auspices of the 'We Tamils' party. Sri S. B. Adityan, leader of the party and several others addressed the audience.

According to a report received by Government the speakers accused the Congress party of having abused its position and utilised the Government machinery to further the prospects of Congress candidates during the last General Elections. They also accused the Congressmen of having resorted to rowdyism and violence with the object of preventing the candidates of the 'We Tamils' party from conducting their election propaganda and canvassing for votes. Sri S. B. Adityan in particular is said to have accused the Police offcials of having failed to protect the opposition parties from the violence to which Congressmen had resorted. He then exhorted the Tamilians, particularly the youth, to keep themselves robust by playing games such as " Chadu-Gudu " and "Silambam." He is further reported to have made a frequent appeal to every young Tamilian to arm himself with a knife (பேனா கத்தி) for self-protection, allegedly for the reason that the Police could not protect him.

After Sri S. B. Adityan concluded his speech, the local Secretary of the " We Tamils " party presented him with a knife. Thereafter, another person reported to be a member of the Dravida Kazhagam presented the President of the Tirunelveli district branch of " We Tamils " party with another knife.

Government understand that, except for the presentation of those two knives and the speeches in question there has been no further distribution of knives or incitement to violence. There is no present likelihood of attack on Congressmen. The question of affording special protection to anyone does not, therefore, arise at this stage. The local Public officials are, however, watching the situation carefully.